# மெட்ரோ ரயில் 2வது திட்ட பணிகளுக்கு ஒப்பந்ததாரர் நியமன ஏற்பாடுகள் தீவிரம்

– நமது நிருபர் –

மெட்ரோ ரயில், இரண்டாவது திட்ட பணிகளை, கொரோனா தாக்கம் குறைந்ததும் துவக்கும் வகையில், செப்டம்பருக்குள் ஒப்பந்தாரர்கள் நியமிக்கப்படுவதற்கு ஏற்பாடு நடக்கிறது.

சென்னை மெட்ரோ ரயில், இரண்டாவது திட்டத்தில், 61 ஆயிரத்து, 843 கோடி ரூபாய் செலவில், மூன்று வழித்தடங்களில், 118.9 கி.மீ., மெட்ரோ ரயில் பாதை அமைக்கப்பட உள்ளது.

இத்திட்டத்தில், முதல் கட்டமாக, மாதவரம் – சிறுசேரி சிப்காட் வழித்தடத்தில், மாதவரம் – தரமணி லிங் ரோடு வரையும், மாதவரம் – சோழிங்கநல்லூர் பாதையில் மாதவரம் – சி.எம்.பி.டி., வரையும், 52.01 கி.மீ., மெட்ரோ பாதை அமைக்கப்பட உள்ளது.

இத்திட்டத்துக்கு, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனம் கடன் வழங்குகிறது. மீதம் உள்ள, 66.89 கி.மீ., பாதை திட்டப்பணிக்கு, ஆசிய வளர்ச்சி வங்கி, புதிய வளர்ச்சி வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கிகள் கடன் வழங்க முன்வந்துள்ளன.

## ஒப்பந்ததாரர்கள் நியமனம்

கடந்தாண்டு, மெட்ரோ ரயில், இரண்டாவது திட்டத்துக்கு, மத்திய அமைச்சர் அமித்ஷா அடிக்கல் நாட்டினார். அதன் பின், பாதை, நிலையங்கள், மற்றும், பணிமனைகள் கட்டுவதற்கு உலக அளவில் ஒப்பந்ததாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு, படிப்படியாக ஒப்பந்தம் கையெழுத்தாகி வருகிறது.

முதல் கட்டமாக, 52.01 கி.மீ., பாதை முடிக்க திட்டமிட்டிருந்தாலும், மூன்று பாதைகள் முழு திட்ட கட்டுமான பணிகளையும், விரைவாக முடிக்க ஏதுவாக, அதிகமான நிறுவனங்களை கட்டுமான பணிக்கு பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.



இதையொட்டி, வேணுகோபால் நகர் – கெல்லீஸ் நிலையங்கள் இடையே, 9 கி.மீ., இருவழி சுரங்கப்பாதை அமைக்க, டாடா லிமிடெட் நிறுவனம் ஒப்பந்தம் செய்யப்பட்டு உள்ளது.

கெல்லீஸ் முதல் தரமணி இணைப்பு சாலை இடையே, 12 கி.மீ., சுரங்கப்பாதை அமைக்கவும், பவர் ஹவுஸ் முதல் போரூர் ஜங்ஷன் வரை, 7.9 மீட்டருக்கு தரைக்கு மேல் பாலத்தில் மெட்ரோ ரயில் பாதை அமைக்கவும், 'எல் அண்டு டி' நிறுவனத்துக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

சென்னை பைபாஸ் சாலை – பூந்தமல்லி பைபாஸ் சாலை,வரை, 7.9 கி.மீ., மெட்ரோ பாதை அமைக்க, எச்.சி.சி.டி., மற்றும் கே.இ.சி., சர்வதேச நிறுவனங்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தம் பெற்ற நிறுவனங்கள் கொரோனா தாக்கம் குறைந்தபின், மெட்ரோ நிர்வாகம் மற்றும், அரசின் வழிகாட்டுதல் அனுமதியுடன் கட்டுமான பணியை துவங்க திட்டமிட்டுள்ளன.

## மூன்று பாதைகள்

மெட்ரோ இரண்டாவது திட்டப்பணிகளில், மாதவரம் – சிறுசேரி சிப்காட்: கலங்கரை விளக்கம் – பூந்தமல்லி பைபாஸ் : மாதவரம் – சோழிங்கநல்லூர் என, மூன்று வழித்தடங்களில், ரயில் பாதை அமைக்கப்படுகிறது.

இப்பாதை, 76.3 கி.மீ., தரைக்கு மேல் பாலத்திலும், 42.6 கி.மீ., சுரங்கத்திலும் அமைகிறது.

இப்பாதைகளில், 128 நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன. இவற்றில், 80 நிலையங்கள் தரைக்கு மேலும், 48 நிலையங்கள் சுரங்கத்திலும் அமைகிறது.

## 2026ல் முடிக்க திட்டம்

இது குறித்து, மெட்ரோ ரயில் திட்ட பிரிவு அதிகாரி கூறியதாவது:

மெட்ரோ, இரண்டாவது திட்ட பணிகள், 2026 ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. கொரோனா தாக்கத்தால், உலக அளவில் பாதிப்பு உள்ளதால், ஒப்பந்தம் கோரும் நிறுவனங்கள், சூழ்நிலைகளை காரணம் காட்டி, பணிகள் துவங்க கால அவகாசம் கேட்கும் நிலை உள்ளது. இதனால், திட்ட முழுபணிகளும் முடிப்பதற்கு காலதாமதம் ஆகும்.

கொரோனா தாக்கம் குறைந்ததும், மத்திய, மாநில அரசின் உரிய வழிகாட்டுதலுடன் பணிகளை துரிதப்படுத்த, விரைவான திட்டங்கள் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்படும். இரண்டாவது திட்டபணிகள் முழுவதற்கும், வரும் செப்டம்பருக்குள் ஒப்பந்ததாரர்கள் நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு, அதிகாரி கூறினார்.